தேவன் அநீதியுள்ளவரல்ல. ஒரு அஞ்ஞானி தூர தேசத்திலிருக்கையில், நாம் இங்கே அமெரிக்காவில் எட்டு, பத்து மில்லியன் டாலர்கள் மதிப்பில் ஆலயங்களை எழுப்பிக்கொண்டு, அந்த அஞ்ஞானிக்கு தேவ செய்தியை எடுத்துச் செல்லாமலிருந்தால், தேவன் நம்மை அதற்காக பொறுப்பாளியாக்கி, அவர்களையோ தப்புவிக்க வைத்துவிடுவார். நிச்சயமாக! தேவன் அநீதியுள்ளவரல்ல.

## வில்லியம் மரியன் பிரன்ஹாம்

## செய்தி: பத்து கன்னிகைகள்

**THE TEN VIRGINS**

டிசம்பர் 11, 1960 பிரான்ஹாம் கூடாரம்
இந்தியானா, அமெரிக்கா

**198.** அவர் இங்கே தேசங்களின்மேல் நியாயத்தீர்ப்புக்கென வருகிறார். "உங்களில் ஒருவனுக்கு வேறொருவனோடே வழக்குண் டானால் நீதிமன்றத்திற்கு போகத் துணிகிறதென்ன? அற்ப வழக்குகளை தீர்க்க நீங்கள் அபாத்திரரா? பரிசுத்தவான்கள்

உலகத்தை நியாயந்தீர்ப்பார்களென்று அறியீர்களா? என்று பவுல் கூறினான். இங்கே நியாயத்தீர்ப்பானது கிறிஸ்துவினிடமும், அவருடையவர்களிடமும் ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர்கள்தான் கூண்டிலேற்றி விசாரிக்கிற வழக்குரைஞர் ஆவர். அவரோ சிங்காசனத்தில் வீற்றிருக்கிறார். வழக்குரைஞராக மணவாட்டி இருக்கிறாள்.

199. இங்கே இவைகள் வருகின்றன. புத்தகங்கள் திறக்கப் பட்டன, ஜீவபுத்தகம் என்ற

மற்றொரு புத்தகமும் திறக்கப்பட்டது.

**200.** முதல் புத்தகம், புறம்பே தள்ளப்பட்ட பாவியைப் பற்றிய புத்தகமாகும். சரி. அவன் துவக்கத்திலேயே ஆக்கினைக்குள்ளாக்கப் பட்டவனாய் இருக்கிறான். அவர்கள்தான் வெள்ளாடுகள். அவனுக்கு ஒரு வாய்ப்பும் இல்லை; அவனது துவக்கமே பாவி யாகத்தான் இருக்கிறது. எனவே அவன் புறம்பே தள்ளப்படுகிறான்.

**201.** செம்மறியாடுகள் நியாயத்தீர்ப்பில் நிற்கின்றன.

அவர்கள் நியாயந்தீர்க்கப்பட வேண்டும்; பரிசுத்தவான்கள் அவர்களை நியாயந்தீர்க்கவேண்டும். **தேவன் அநீதியுள்ளவரல்ல.** **ஒரு அஞ்ஞானி தூர தேசத்திலிருக்கையில், நாம் இங்கே அமெரிக்காவில் எட்டு, பத்து மில்லியன் டாலர்கள் மதிப்பில் ஆலயங்களை எழுப்பிக்கொண்டு, அந்த அஞ்ஞானிக்கு தேவ செய்தியை எடுத்துச் செல்லாமலிருந்தால், தேவன் நம்மை அதற்காக பொறுப்பாளியாக்கி, அவர்களையோ தப்புவிக்க**

வைத்துவிடுவார். நிச்சயமாக! தேவன் அநீதியுள்ளவரல்ல.

202. இங்குள்ள நீங்கள் இதை இதற்கு முன்பு கண்டிருக்காவிடில், நீங்கள் பொறுப்பாளியல்ல; செய்தியை மக்களிடம் எடுத்துச் செல்வதற்கு நாங்கள் பொறுப்புள்ள வர்களாயிருக்கிறோம். நீங்களோ அதற்கு நீங்கள் செவிகொடுப்பீர்களா, அல்லது மாட்டீர்களா என்பதற்கு பொறுப் புள்ளவர்களாயிருக்கிறீர்கள்.

203. கோவில்களைக் கட்டி கும்பிடுகிற அஞ்ஞானிகள் எழும்பு வார்கள்; அவர்களுக்கு

**அதைவிட மேலாக ஒன்றும் தெரியாது. தேவனைப் பற்றி அவர்களுக்கு ஒன்றும் தெரியாது. தேவன் அநீதி யுள்ளவரல்ல. அவர்களுக்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்திருக்காவிடில், அவர்களை தேவன் ஆக்கினைக்குள்ளாக்கமாட்டார். அவர்களுக்கு ஒரு இடத்தை ஒதுக்குவார்.**

**204.** எனவே சபையில் ஒவ்வொரு சபைக் காலத்திலும், எபேசு சபைக்காலம் முதற்கொண்டு, இங்கே இந்த சபைக்காலம் வரை யிலும், செய்தியானது, கிறிஸ்துவின்

உண்மையான செய்தியானது, அது ஆதியில் இருந்ததைப்போலவே, பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம், வல்லமை, உயிர்த்தெழுதல், அந்நிய பாஷைகளில் பேசுதல், சுகமளிக்கும் வரங்கள், இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் ஞானஸ்நானம், மற்றும் அவர் போதித்த இன்னபிற காரியங்களோடு பெற்றிருக்கும் மணவாட்டியில் உள்ள ஒவ்வொருவரும், வழக்குரைஞராக நிற்பார்கள்.

205. **இதோ இங்கே ஒருவருடைய வழக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.**

“இன்னின்ன இடத்தில் உனக்கு ஒரு கூட்டம் உண்டாயிருந்தது. நீ அவரிடம் கூறினாயா?” என்று கேட்கப்படுகிறது.

206. இப்பொழுது வழக்குரைஞர் கூறுகிறார். “ஆம், நான் அவருக்குச் சொன்னேன்” என்று. அது புத்தகத்தில் எழுதப்பட்டுள்ளது. அதை மறுக்கமுடியாது. நம்முடைய எண்ணங்கள் கூட அங்கே பதிவு செய்யப்பட்டுள்ளது. அதை நீங்கள் மறுதலிக்க முடியாது. “ஆம் ஞானஸ்நானம் பெறவேண்டும் என்று நான்

அவனுக்குக் கூறினேன்" என்று பதிலளிக்கிறார்.

"ஜெஃபர்சன்வில்லில் உள்ள கூடாரத்தில் தானே"

"ஆம் ஐயா, நான் அதை அறிவேன்" என்று பதில் வருகிறது.

207. "ஆம், இங்கே இப்புத்தகத்தில், அவர்கள் அதைச் செய்ய வேண்டும் என்பதைப் பற்றி நீ கூறியவைகள் பதிவு செய்யப் பட்டுள்ளன. பின்பு, அவர் வேத வாக்கியங்களையெல்லாம் ஆராய்ந்து, அது சரிதான் என்பதை கண்டுகொண்டார்.

ஆயினும் அதற்குக் கீழ்ப்படியவில்லை"

208. "அக்கிரமச் செய்கைக்காரரே, என்னை விட்டு அகன்று போங்கள் உங்களை நான் அறியேன்" என்பார்.

209. அங்கேதான் அவர் வெள்ளாடுகளை செம்மறியாடுகளை விட்டு பிரிக்கிறார். செம்மறியாடுகளை தனது வலது பக்கமாகவும், வெள்ளாடுகளை தனது இடது பக்கமாகவும் நிறுத்துகிறார். அங்கே நீங்கள்

அந்த மூன்றுவிதமான மக்களையும் காணலாம்.

210. ஆனால் மணவாட்டியாகிய இந்த வகுப்பினர் ஒருபோதும் அந்த வகுப்பினராக இருக்கமுடியாது. அப்பொழுது மணவாட்டியானவள், அவரோடு ஆலயத்தில் இருக்கிறாள். ஏனையோர், பாடுபட்டு, தங்களுடைய மகிமையை இராஜ்யத்தினுள் கொண்டு வருகிறார்கள். மணவாட்டியோ மணவாளனோடு தொடர்ந்து இருந்துகொண்டிருக்கிறாள். மற்றவர்களுக்கோ,

இவர்களைப்போல் அவர்கள் புறம்பே தள்ளப்படுவதுமில்லை, அவர்கள் பணிவிடை செய்வார்கள். ஏனெனில் செம்மறியாடுகளாகிய அவர்களை அவர் வெள்ளாடுகளினின்றும் வேறு பிரித்தார். ஆனால் அவர்...

211. ஆனால் வெள்ளாட்டுக்கோ அதைப்பற்றிய அறிவு இல்லை; அதைப்பற்றி அது அக்கறை கொள்ளவில்லை. அவன் ஒரு வெள்ளாடாக இருக்கிறான், வெள்ளாடு என்ற நிலையைப் பற்றி திருப்தி கொண்டிருக்கிறான். எனவே ஒரு வெள்ளாடாக அவன்

மரிக்கிறான். அதுவே அவன் முடிவாகும். அவ்வளவுதான்.

